நிதித்துறையில்
நாணயம் மிக்க நண்பன்
ஷப்றா
297, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
2, R. A. De Mel Mawatte,
COLOMBO - 4.
Telephone:- 508087—90

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 26 சனிக்கிழமை [12-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 312

# ஜே.வி.பியினருக்கு ஆயுதங்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ். வழங்கியது!

## வடக்கு-கிழக்கு மாகாண சபையின் மாஜி மந்திரி அம்பலப்படுத்துகிறார்

கொழும்பு, அக்டோபர் 12

வடக்கு - கிழக்கு மாகாண சபையை ஆட்சி செய்த ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம், ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு (ஜே. வி. பிக்கு) ஆயுதம் வழங்கியது.

ஜே.வி.பிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்துக்கும் இடையில் நெருங்கிய உறவுகள் இருந்தன. ஜே.வி.பியினர் காட்டில் ஒளிந்திருந்த காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் பெரும் எண்ணிக்கையான ஆயுதங்களை அவர்களுக்கு வழங்கியது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். மாகாண அரசில் அமைச்சராக இருந்து பதவி விலகியவரும், அரசறிவியல் ஆய்வாளருமான திரு. தயான் ஜெயத்திலக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஜே. வி. பியினருக்கு ஈ. பி. ஆர். எல். எவ்விடமிருந்து ஆயுதம் கிடைப்பதற்கு வெளிநாட்டு ஏஜன்சி ஒன்று தரகராகச் செயற்பட்டிருக்கக் கூடும்.

தமிழ்த் தேசிய இராணுவத்திடமிருந்து 1989 இல் வந்த பயமுறுத்தலை நாம் சிறிதாக மதிப்பிடக்கூடாது. அவர்கள் பெரும் ஆபத்தானவர்களாக இருந்தார்கள்.

''கார்ள் கஸ்டால்'' ரகத்தைச் சேர்ந்த தாங்கி எதிர்ப்பு ஆயுதங்களிகூட

[3 ஆம் பக்கம் பார்க்க]

## நிலைமை இப்போது மாறிவிட்டது! சிறிமா ஒப்புக்கொள்கிறார்

கொழும்பு, அக். 12

''ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணையை மீண்டும் கொண்டுவர போதியளவு கையெழுத்து கிடைப்பதுதான் சந்தேகம் இப்போது நிலைமை மாறிவிட்டது.''

— இப்படிக் கூறினார் எதிர்க்கட்சித் தலைவி சிறிமா பண்டாரநாயக்கா.

கொழும்பில் அண்மையில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை நாம்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ராணுவத்துக்கு மட்டும் ரூ. 1,530 கோடி ஒதுக்கீடு!

கொழும்பு, அக். 12

ஸ்ரீலங்கா அரசு தனது இராணுவத்துக்காக அடுத்த வருடம் சுமார் ஆயிரத்து 530 கோடி ரூபாவைச் செலவிடும்.

பிரதமரும் நிதி அமைச்சருமான டி. பி. விஜயதுங்க, 1992 ஆம் ஆண்டுக்குரிய உத்தேச செலவினங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் இவ்விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் இராணுவத்திற்கு ஆயிரத்து 120 கோடி ரூபாவைச் செலவிட ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்திருந்தது என்றும்—

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தெரிவுக் குழு இருக்கும்போது புலிகளுடன் தொண்டா பேசுவதா?

### சீறிப் பாய்கிறார் சிறிமாவோ

கொழும்பு, அக். 12

இனப் பிரச்சினை பற்றி ஆராய நாடாளுமன்றத் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு இதுபற்றி ஆராய்ந்து கொண்டிருக்கும்போது மறுபுறத்தில் புலிகளுடன் பேச்சு நடத்துவதா?

—இப்படி கேள்வி எழுப்பினார் எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கேட்டார்:

மங்கள முனசிங்க எம்.பியின் தலைமையில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

அத்தகைய குழு நியமிக்கப்பட்டதை நாம் எதிர்க்கவில்லை; ஆதரிக்கிறோம்; தெரிவுக் குழுவில் இடம்பெறவும் விரும்பினோம்; எமது தரப்புப் பெயர்களையும் சமர்ப்பித்தோம்.

ஆனால் அரசு தெரிவுக் குழுவுக்கு முன்னுரிமை கொடுக்காமல் செயற்படுகிறது.

அமைச்சர் தொண்டமான் புலிகளுடன் பேசப்போகிறார். இனப் பிரச்சினைபற்றி தெரிவுக் குழு ஆராயும்போது புலிகளுடன் பேச்சு நடத்துவதா?

—இப்படி அவர் கேள்வி எழுப்பினார்.

(உ-3)

## புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு தொண்டாவுக்கு சுதந்திரம் உண்டு!

### பிரதமர் விஜேதுங்க பதில்

''இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சியில் ஈடுபடுவதற்கு அமைச்சர் தொண்டமானுக்கு சுதந்திரம் உண்டு. பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தொண்டமானோ அல்லது வேறு எவருமோ மேற்கொள்ளும் அர்த்தமுள்ள முயற்சியை அக்கறையுடன் பரிசீலனை செய்ய அரசாங்கம் தயாராகவே உள்ளது.

—பிரதமர் டி. பி. விஜேதுங்கா கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

கேகாலை மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. தர்மசிறி சேனநாயக்கா எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

(உ-3)

## முச்சந்தி முரளி



அப்ப...... அலைவயின்றை தடை உள்ளூர் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்குது ...... அடியனே......! எங்கட விவசாய பீடத்துக்கு ஒரு சபாஷ்.....!

## தமிழக மீனவர் மீது தாக்குதல்

# ஸ்ரீலங்காவிடம் இந்தியா கடும் ஆட்சேபம் தெரிவிப்பு

புதுடில்லி, அக். 12

கடந்த மாதம் 19ஆம் திகதி கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்கள் 24 பேர் மீது சிறிலங்கா கடற் படையினர் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பாக, சிறிலங்கா அரசிடம் இந்தியா கடும் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றும் இந்தியா நிபந்தனை விதித்திருக்கிறது.

இது தொடர்பாக இந்தியாவின் ஆட்சேபனையை கொழும்பில் உள்ள இந்திய உதவித் தூதுவர் சேரி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## அநுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்ட

# மண்எண்ணெய் லொறியை விடுவிக்க நீதிமன்ற உத்தரவு

வட பகுதிக்கு எடுத்து வரப்படுகையில் அநுராதபுரம் பொலீஸாரினால் தடுத்து வைக்கப்பட்ட 45 பரல் மண்ணெண்ணையும் லொறியையும் விடுவிக்குமாறு அநுராதபுரம் மேலதிக நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

தடை விதிக்கப்பட்ட பொருட்கள் கொண்டு செல்லப்படுவதாகத் தெரிவித்து, இந்த லொறியை அநுராதபுரம் பொலீஸார் கடந்த மாதம் 20 ஆம் திகதி முதல் தடுத்து வைத்திருந்தனர். லொறியின் சாரதியும், கிளீனரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பாக லொறி உரிமையாளர் நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். மனு கடந்த வார இறுதியில் நீதிவான் குலதுங்க முன்னிலையில் எடுக்கப்பட்டது.

மனுவை விசாரித்த நீதிவான், வடக்கே கொண்டு செல்ல தடைவிதிக்கப்பட்ட பொருட்களில் மண்எண்ணெய் இல்லை என்பதால் லொறியையும், மண்எண்ணெய் பரல்களையும் உரிமையாளரிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

லொறிச் சாரதி, கிளீனர் ஆகியோரை உடனடியாக விடுதலை செய்யும்படியும் நீதிவான் பணித்தார். [உ-3]

## துளசிச் செடி போன்ற

# உள்ளூர் மூலிகைகள் மூலம் நுளம்புத் திரி உற்பத்தி!

### விவசாயபீட முயற்சி வெற்றி

யாழ்ப்பாணம், அக். 12

உள்ளூர் மூலிகைகளைக் கொண்டு நுளம்புத் திரியை யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம் தயாரித்து வருகிறது.

இரசாயனக் கலவைகளைப் பாவிக்காமல்—

சுகாதாரத்துக்கு கேடு ஏற்படாத வகையில்— நுளம்புத் திரியை தயாரிப்பதில் விவசாயபீடம் வெற்றிகண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூரில் கிடைக்கும் துளசி, சஞ்சன்கோரை ... மூலிகைகளைக் கொண்டு இந்தத் திரி தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திரி விரைவில் விற்பனைக்கு வரவிருக்கிறது.

நுளம்புத்திரி தயாரிப்பிற்காக விவசாயபீடம் அமைந்துள்ள கிளிநொச்சியில் பல ஏக்கர் நிலத்தில் துளசி, சஞ்சன்கோரை போன்றவை பயிரிடப்பட்டுள்ளன.

வருட முடிவுக்குள் நுளம்புத்திரி உற்பத்தி யாழ். மாவட்டத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவை எட்டிவிடும் என பல்கலைக்கழக வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன.

(உ-3)

## சிங்கள மீனவர் படகு மீது நடுக்கடலில் தாக்குதல்!

### மூதூர் கடற்பகுதியில் சம்பவம்

மூதூர், அக்கரைந்த ஆழ்கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சிங்கள மீனவர் படகுகள் இரண்டின்மீது படகில் வந்த இனந்தெரியாத சிலர் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தினர்.

ஒரு படகு தப்பி கரை சேர்ந்துவிட்டது. மற்றைய படகை காணவில்லை. அதற்கு என்ன நடந்தது என்பது பற்றி எதுவித தகவலும் தெரியவில்லை.

கூட்டுப் படைத் தலைமையகம் நேற்று இந்த விவரங்களை வெளியிட்டது.

இதேவேளை—

திருகோணமலை நகரப் பகுதியில் 90 கிலோ கிராம் வெடிமருந்து அடங்கிய இரு கொள்கலன்களை பாதுகாப்பு படையினர் கைப்பற்றினர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## 18 நாள் குழந்தைக்கு இருதய திறப்புச் சிகிச்சை!

சென்னை, அக். 21

18 நாள் வயதுக் குழந்தை ஒன்றுக்கு, இதயத் திறப்புச் சத்திர சிகிச்சை மிக வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில், சென்னையில் உள்ள மருத்துவமனை ஒன்றில் நான்கு மணி நேரம் செய்யப்பட்ட இதயத் திறப்புச் சத்திர சிகிச்சையின் பின்னர் குழந்தை மிகச் சுகமாக உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

11 வருடங்களாகக் குழந்தை இல்லாதிருந்த ஒரு தம்பதியினருக்குப் பிறந்த இந்தக் குழந்தைக்கு நாடி, நாளங்கள் இடம்மாறியிருந்தன. (அ)

## புலிகளைப் பாராட்டுகிறது போர்வேட் புளொக் கட்சி

விடுதலைப் புலிகளின் போராட்டத்தை அகில இந்திய போர்வேர்ட் புளொக் கட்சி பாராட்டுகிறது.

இத்தாவலைக் கட்சியின் அகில இந்தியச் செயலாளரும் தமிழக சட்டமன்றத்தின் முன்னாள் உறுப்பினருமான பி. என். வல்லரசு அண்மையில் திருச்சி உறையூரில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் வெளியிட்டார்.

''நேதாஜியைத் தலைவராக ஏற்றுக்கொண்டு, அவரின் புலிக்கொடியை கையில் ஏந்தி, ஈழத் தமிழர்களுக்காக போராடுகிறார் திரு. பிரபாகரன்.

அவரையும் அவரது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராட்டத்தையும் எமது கட்சி பாராட்டுகின்றது.''— இப்படி அவர் அங்கு குறிப்பிட்டார். [உ]

## திங்கள் தொடக்கம் உணவு முத்திரை வழங்கல்

யாழ்ப்பாணம், அக். 12

யாழ். மாவட்டத்தில் ஆறாவது தொடர் உணவு முத்திரைகள் அடுத்த திங்கட்கிழமை முதல் வழங்கப்பட இருக்கின்றன.

தற்போது உணவு முத்திரை வைத்திருப்போரில், உலர் உணவு நிவாரணம் பெறுவோர் தவிர்ந்த ஏனையோருக்கு புதிய உணவு முத்திரைகள் வழங்கப்படும் என சமூகசேவைப் பகுதி அதிகாரி

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### சாக்கு விற்பனை

கழிவுச்சாக்குகள் தொகையாக விற்பனைக்குண்டு வாங்க விரும்புவோர், சங்கத்தில் சாக்குகளைப் பார்வையிட்டு 1991 - 10 - 15 ஆம் திகதி மாலை 4-00 மணிக்கு முன்னர் கூறுவிலையை சமர்ப்பிக்கவும் யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி திருநெல்வேலி. [சி-0646]

### மணமகன் தேவை

யாழ். இந்து. செவ்வாய்க் குற்றமற்ற B. A. பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. வயது 38. நட்சத்திரம் சுவாதி - 2 சைவபோசனம் விரும்பத்தக்கது முதல் கடிதத்திலேயே முழு விவரங்களுடன், ஜாதகத்தையும் அனுப்பவும். சீதனம் பேசித் தீர்க்கலாம் தொடர்பு: தா. சி. கந்தசாமி வள்ளிவாசா, மீசாலை வடக்கு, கொடிகாமம். [18376]

யாழ். இந்து. செவ்வாய்க் குற்றமற்ற B Com பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை வயது 40 நட்சத்திரம் உத்தரட்டாதி - 3. முதல் கடிதத்திலேயே முழு விவரங்களுடன், ஜாதகத்தையும் அனுப்பவும் சீதனம் பேசித் தீர்க்கலாம். தொடர்பு: தா. சி. கந்தசாமி. வள்ளி வாசா, மீசாலை வடக்கு கொடிகாமம். [18375]

### A/L கணக்கியல் புத்தகம்

''கணக்கியல் கொள்கைகளும், கணக்கீட்டு நியமங்களும்'' உள்ளே. பிரசுரஇலாப நட்டக் கணக்கு. ஐந்தொகை என்பவற்றில் வெளிக்காட்டப்பட வேண்டிய விடயங்கள், கணக்கீட்டு நியமங்கள், கணக்கீட்டு விதிகள், நிதிப் பாய்ச்சல் கூற்று. சிறு குறிப்புகள். ஆசிரியர்: விரிவுரையாளர் பா. பாலச்சந்திரன், 165 பக்கம் விலை 65/- [18379]

### ஆண்டு – 5

பாடசாலை ஒத்த அனுமதி, புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான மாதிரி வினாக்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். [தமிழ், கணிதம், ஆங்கிலம்] Board கல்வி நிறுவனம், 58A பிரவுண் வீதி யாழ்ப்பாணம். [4338]

பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப் பரீட்சை, புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் [கணிதம், தமிழ், ஆங்கிலம்] 13 - 10 - 91 ஞாயிறு வெளியிடப்படும். பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [18360]

### அம்பாள் திருமண சேவை

34 வயது B Sc சிவில் பொறியியலாளருக்கும், 30 வயது சைவம் எலெக்ரோனிக் பொறியியலாளருக்கும், B. Sc அல்லது I. C M A. மணப்பெண்கள் தேவை. விண்ணப்ப முற்பணம் ரூபா 50/- சின்னச்சாமி குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி நல்லூர், யாழ்ப்பாணம் [18389]

### வெள்ளிதெசை

ஏழரைச்சனி நெருக்கடிகள் மத்தியிலும் பிரேமதாச வின் வெள்ளிதெசை ஆயுட்கால ஜனாதிபதியாக்கும். மேலும் ஜனாதிபதியின் வெற்றிகளைக் கூறும். சோதிட நூல்களுக்கு R V. புத்தக நிலையம் கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம் நூலாசிரியர்: Prof சத்தியதாஸன். [18121]

### சோதிடம்

ஜாதகம் எழுத, பலனறிய, அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க, திருமணப் பொருத்தம், வெளிநாடு செல்லும் யோகம் அறிய சந்தியுங்கள்: வேலணை சோதிடர் சிவராசா, 152B, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம் [18392]

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும் பியூரோ, 39/17 மின்சார நிலைய வீதி 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/0687]

## திங்கள்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் தெரிவித்தார்.

அதே வேளை, செப்டம்பர் மாதத்துக்குரிய 10ஆம் இலக்க உணவு முத்திரைகளை இம் மாதம் 20 ஆம் திகதி வரை ப. நோ. கூ. சங்கங்கள் செயலகத்தில் ஒப்படைக்கலாம் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (அ-3)

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| ஆண்டவன் படைப்பு: | அரக்கர் அழிப்பு: |
|---|---|
| 05 | 12 |
| 12 | 10 |
| 1970 | 1987 |

### இராசநாயகம் ராஜராஜன்

(ராஜ்)

ஒளி விளக்காய் சுடர் விட்ட
எங்கள் அன்பு மகனே ராஜ்
அன்பால் எம்மைக் கவர்ந்திழுவீர்!
அன்பு நிறைந்த எம் செல்வமே!
உன்பாசம் இன்று நாம் வாட,
செல்லாய் ஆகிப் பிரிந்தீர்!
உன்போல் இனி யார் உளர்!
உற்ற துணையே! எம் வளர்ந்த உறவே!
உம் பிரிவினை எப்படித் தாங்குவோம்!
உன் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உமது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணா,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

ராஜராஜன் இல்லம்,
கோண்டாவில் கிழக்கு. [18187]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அம்பலவாணர் இராசையா

(இளைப்பாறிய சித்திர விரிவுரையாளர், கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

மலர்வு: 18 – 8 – 1916

உதிர்வு: 12 – 9 – 1991

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள்.

70, குறோசெற் ஒழுங்கை,
சுண்டிக்குளி. (4341)

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| ஆண்டவன் படைப்பு: | அசுரர் அழிப்பு: |
|---|---|
| 22 | 12 |
| 03 | 10 |
| 1969 | 1987 |

### செல்வன் ந. சுரேஸ்குமார்

(யா/கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்)

அன்பே,
அழகிய உன் முகம் நாம் பார்த்து
ஆண்டுகள் நான்கு ஆனதையா!
நெஞ்சம் கலங்க விட்டு
நெடுந்தூரம் போய் விட்டாயே!
ஆண்டுகள் எத்தனை ஆகிடினும் - உன்
நினைவலைகள் எமைவிட்டகலாதையா!

உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர், சகோதரர்கள்,
பேரன், பேர்த்தி,
உறவினர்கள், நண்பர்கள்.

[illegible]வில் கிழக்கு, [18378]

---

## சீன் கல்வி நிலையம்

திருநெல்வேலி.

O/L

மார்கழி பரீட்சைக்கான வினா-விடை வகுப்புகள் நடைபெறுகின்றன.

| | | |
|---|---|---|
| 8- 9 | ஆங்கிலம் | M. A ஹரி |
| 9-10 | விஞ்ஞானம் | இரா. செல்வவடிவேல் |
| 10-11 | சமூகக்கல்வி | ஜோசப் |
| 11-12 | கணிதம் | கருணாகரன் |
| 12-1 | தமிழ் | புலவர் சிவா |
| 1-2 | வர்த்தகம் | சிவகுமார் |

ஆரம்பம்:- **14 - 10 - 91**

காலை 8 மணி.

[சி 0644]

---

சைவ சித்தாந்த உயர் நிறுவன நிதி உதவிக்காக 13 - 10 - 1991 ஞாயிறு பி. ப. 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில், இலங்கை வேந்தனின்

## ★ கதகளி பரத நாட்டியம் ★

புலவர் மூர்த்து இராசரத்தினத்தின் கதைவசனம் நெறியாக்கத்தில் உருவாகும்

## இலங்கை வேந்தன் (இசை, நடன, நாடகம்)



(இராவணனாக இலங்கை வேந்தன் தோன்றும் காட்சி)

சைவப்புலவர்:
திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை,
கௌரவ அதிபர்.

சித்தாந்த கலாநிதி,
மு. கணபதிப்பிள்ளை,
கௌரவ அமைப்பாளர்;

அன்பளிப்பு:
விக்னா கல்வி நிறுவனம்,
பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். [18382]

---

# இசை, நடன வகுப்புகள்

KALALAYAAH கலாலயா

| | |
|---|---|
| ★ சங்கீதம் | ★ புல்லாங்குழல் |
| ★ வயலின் | ★ மிருதங்கம் |
| ★ வீணை | ★ பரதநாட்டியம் |

ஆரம்பம்: 17-10-1991 (விஜயதசமி) அன்று பிற்பகல் 3 00 மணிக்கு

விவரங்களுக்கு: **கலாலயா**

விக்டோறியா வீதி, (ஆஸ்பத்திரியின் பின்புறம்)
யாழ். நகர்.

[சி 0711]

---

## 93 A/L

★ [விஞ்ஞான பாடங்கள் மட்டும்]

எமது அனுபவமுள்ள ஆசிரியர் குழுவினால்

ஆரம்பம்:
19 — 10 — 1991
[சனி காலை 7 மணி]

ஏமாற்றத்தை தவிர்க்க அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

*NEW MASTER INSTITUTE*
JAFFNA.

---

## இந்த இடம் ஞாபகம் இருக்கிறதா?

உள்ளூர் உற்பத்தி பற்றிக் குறிப்பிட்டிருந்தோம்.
யாழ் மாநகர தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம்
தரும் புதிய உள்ளூர் உற்பத்தி சுவையானது;
வெளிநாட்டுப் பொருள்களுக்கு நிகரானது.
நீங்களே! மூக்கின் மேல் விரலை வைப்பீர்கள்!
சற்றுப் பொறுமையைக் கையாளுங்கள்.
இன்னும் சில தினங்கள் பொறுத்திருங்கள்
இந்த இடத்தில் உண்மை வெளிக்கும்.

### தயாரிப்பு:

**யாழ். மாநகர தெங்கு பனம் பொருள் உற்பத்தி-விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்.**

விளம்பர வடிவமைப்பு,
செனித் ஜோ. எகட்டன்

[18377]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சனநாயகம் தேவையா?

தெற்கில் அரசியல் குழப்பம் ஒன்றை உருவாக்குவதற்கு எதிர்க் கட்சிகளும், லலித் - காமினி தலைமையிலான ஐ. தே. க. அதிருப்தியாளர்களும் வகுத்த திட்டம் உடனடியாகச் சரிவராமற் போய்விட்டது!

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்குக் களங்கம் ஏற்படுத்தி, தாம் முன்னுக்கு வருவதே அவர்களின் பிரதான நோக்கமாக இருந்தது.

அதனை அடிப்படையாக வைத்து எழுந்த, ஜனாதிபதி மீதான அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணை நிராகரிக்கப்பட்டதுடன் எதிரணியினரின் திட்டம் ஆட்டம் கண்டது. அதனைத் தொடர்ந்து அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை அவர்கள் தாமாகவே பின்னிழுத்துக்கொண்டனர்.

சபாநாயகர் மீது அவர்கள் விழுந்தடித்துக்கொண்டு சமர்ப்பித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையும் பெரும் வாக்கு வித்தியாசத்தில் தோல்வி கண்டு போயிற்று.

ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையைத் தாம் சமர்ப்பிப்பதற்கு தூண்டு கோலாக பின்னணியில் நின்றவர் சபாநாயகரே என்றும், அவர் கடைசி நேரத்தில் 'கைக்குள் போடப்பட்டுவிட்டார்' என்றும் எதிரணியினர் கூறுகின்றனர். ஆனால் அவரைப் பதவி விலக்கக் கூடாது என்று 123 எம். பிக்கள் வாக்களித்திருக்கிறார்கள்.

இதிலிருந்து ஒன்றைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையில் கையெழுத்திட்டவர்கள் பின்னர் மனம் மாறி 'பழைய' பக்கம் போயிருக்கிறார்கள் என்பதே அதுவாகும்.

அவர்கள் அந்தப் பிரேரணையில் மனம் விரும்பி ஒப்பமிடவில்லை; அல்லது சந்தர்ப்பவாதிகளாக மாறி தமது நிலைப்பாட்டை மாற்றியிருக்கிறார்கள். அவர்களை நம்பிக் காரியத்தில் இறங்கியவர்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்கள், பாவம்!

அவர்கள் அன்றிச் சபாநாயகரே தம்மை ஏமாற்றி விட்டதாக எதிரணியினர் கூறுகின்றனர். முதலில் பிரேரணையை ஏற்றுக் கொண்டவர், சுமார் ஒன்றரை மாதங்களின் பின்னர் எவ்வாறு நிராகரிக்க முடியும் என்று கேட்கிறார்கள்.

இது விடயத்தில் தம்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டாலும் கூட, தமது தீர்ப்புக்கான காரணத்தைச் சபாநாயகர் அறிவிக்க வேண்டும். நீதிமன்றத்தை எடுத்துக் கொண்டாற் கூட, நீதிபதி தாம் வழங்கும் தீர்ப்புக்கான காரணத்தை வெளிப்படுத்துகிறார். இவ் விடயத்தில் சபாநாயகரும் நீதிபதியாகவே கருதப்பட வேண்டியவர்.

எனவே அவர் தாம் பிரேரணையை நிராகரித்ததற்கான காரணத்தைத் தெளிவாக வெளிப்படுத்துவது அவசியம். அப்போதுதான் அவர் தொடர்ந்தும் அந்தப் பதவியை வகிக்கும் அருகதை பெறமுடியும்.

எப்படியோ, மக்கள் பிரதிநிதிகள் என்று நாடாளுமன்றத்திற்கும், ஜனாதிபதி மாளிகைக்கும் சென்றவர்கள் தங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைச் சாதிக்கவும், பதவி ஆசையைப் பூர்த்தி செய்யவும் மக்கள் கொடுத்த ஆணை அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். மக்களின் வரிப் பணத்தையும், நேரத்தையும் வீணாக்கி அவர்கள் மேல் குதிரை விடுகிறார்கள்!

இப்படி ஒரு சனநாயகம் தேவை தானா?

## அதிருப்திக் குழு எம்.பிக்கள் 4 பேர் கடைசி நேரத்தில் பின்வாங்கினர்!

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று முன்தினம் இரவு நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த நான்கு எம். பிக்கள் சபையில் இருக்கவில்லை.

அதிருப்தியாளர் குழுவில் சேர்ந்த பின்னரும், இன்னும் கட்சியிலிருந்து உத்தியோகபூர்வமாக வெளியேற்றப்படாமல் இருக்கும் நான்கு எம்.பிக்களுமே வாக்களிப்பின் போது சபையில் இருக்கவில்லை.

சபாநாயகருக்கு எதிரான பிரேரணையை நிராகரித்து வாக்களிப்பது என ஐ. தே. கட்சியின் நாடாளுமன்றக் குழு ஏற்கனவே முடிவு செய்திருந்தது.

நாடாளுமன்றக் குழுவின் முடிவை மீறி, பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தால், அந்தக் காரணத்தைக் காட்டியே அந்த நால்வரையும் கட்சியிலிருந்து வெளியேற்ற முடியும். கட்சியிலிருந்து வெளியேற்றினால் அவர்கள் எம். பி பதவியையும் இழக்க வேண்டிவரும்.

இதிலிருந்து தப்புவதற்காகவே கடைசி நேரத்தில் — சபையில் வாக்கெடுப்பு நடந்த சமயம் சமுகமளிக்காமல் அவர்கள் பின்வாங்கியதாகக் கருதப்படுகிறது.

ஆர். ஏ. ஜெயதிலக்க, ரவீந்திர சமரவீர, ஏ. எஸ். முத்துபண்டா, பி. எம். பி. சிறில் ஆகியோரே அந்த நால்வருமாவர்.

அதிருப்திக் குழுவைச் சேர்ந்த எட்டுப் பேர் ஏற்கனவே கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டனர். இதனால் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் முடிவு அவர்களைக் கட்டுப்படுத்தாது என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் எட்டுப் பேரும் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தனர்.

லலித் அத்துலத் முதலி, காமினி திஸாநாயக்கா, ஜி. எம். பிரேமச்சந்திரா, சமரவீர வீரவன்னி, சந்திரா கங்கந்த, வின்சென்ட் பெரேரா, பிரேமரட்ன குணசேகர, லக்ஷ்மன் செனிவிரட்ன ஆகியோரே அந்த எண்மருமாவர். (உ-த)

### சபாநாயகருக்கு எதிரான மனு:

## தமிழ் உறுப்பினர்கள் பிரிந்து நின்று வாக்களிப்பு

கொழும்பு, அக். 12

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இரவு வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது தமிழ் எம். பிக்கள் பிரிந்து நின்று வாக்களித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரும் —

கூட்டணிப் பட்டியலில் தெரிவான ஈ. என். டி. எல். எவ். பிரதிநிதி கே. சிறினிவாசனும் —

கூட்டணிப் பட்டியலில் தெரிவான ரெலோ பிரதிநிதிகள் ஜி. கருணாகரன், ஜே. திவ்வியநாதன் ஆகியோரும் —

மட்டக்களப்பு மாவட்ட சுயேச்சைக் குழு உறுப்பினரான டஷீர் சேகுதாவூத்தும் —

வன்னி மாவட்ட சுயேச்சைக் குழு உறுப்பினரான நூகூராஸ் அயூபும் —

முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் பிரேரணையை எதிர்த்து — அரச தரப்புக்கு ஆதரவாக — வாக்களித்தனர்.

கூட்டணிப் பட்டியலில் எம். பியான ஈ. பி. ஆர். எல். எவ்வைச் சேர்ந்த கே. சுரேஷ் பிரேமச்சந்திரன், ராஜா குகனேஸ்வரன், இமானுவேல் சில்வா, கே. நவரட்ணம், பிரின்ஸ் காசிநாதர் ஆகியோர் பிரேரணைக்குச் சார்பாக — எதிர்க் கட்சிகளை ஆதரித்து — வாக்களித்தனர். [உ-த]

## கலைஞர் பத்மநாதனுக்கு திங்களன்று மணிவிழா

நாதஸ்வர மேதை திரு. என். கே. பத்மநாதனின் மணிவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை நல்லை ஞான சம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

அன்று காலை 9.00 மணி முதல் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் பத்மநாதன் தம்பதியருக்கு அறுபதாம் கல்யாணம் நடத்தி வைக்கப்படும். ஈழத்தின் சிரேஷ்ட சிவாச்சாரியர்கள் இக்கல்யாண வைபவத்தை நிகழ்த்துவர்.

அவ்வேளையில் ஈழத்தின் அனைத்து நாதஸ்வர, தவில் வித்துவான்களும் மங்கள இசை வழங்குவார்கள். அறிஞர்கள், கலைஞர்கள் மற்றும் சான்றோர்கள் அறுபதாம் கல்யாணம் காணும் தம்பதியருக்கு வாழ்த்துரை வழங்குவர்.

அன்று மாலை 3-00 மணி முதல் மணிவிழாக் கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். இக்கலை நிகழ்ச்சிகள் 15 ஆம், 16 ஆம் திகதிகளிலும் பிற்பகலில் தொடர்ந்து நடைபெறவுள்ளன. (அ)

## கொப்பே, விமலரத்தினா இருவருக்கும் விருதுகள்

கொழும்பு, அக். 12

வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவுக்கு ''வன விக்கிரம'' என்ற கௌரவ விருது வழங்கப்பட்டது.

இராணுவ தினத்தை முன்விட்டு நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் நடந்த விசேட வைபவத்தில் வைத்து ஜனாதிபதி திரு. பிரேமதாச இந்த விருதை வழங்கினார்.

யாழ். தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்னாவுக்கு 'வன விக்கிரம' ''வனசூர்ய'' ஆகிய கௌரவ விருதுகளை ஜனாதிபதி வழங்கினார்.

மற்றும் பல அதிகாரிகளுக்கும், படையினருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. அவர்களில் பலர் நடக்க முடியாத நிலையில் முச்சக்கர வண்டிகளில் வந்து தமக்குரிய விருதுகளைப் பெற்றனர்.

இறந்த சிப்பாய்களின் தாய்மார்கள், மனைவிமார்கள், குழந்தைகள் ஆகியோரும் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர். (அ)

## புங்குடுதீவில் பீரங்கித் தாக்கு

புங்குடுதீவு, அக். 12

புங்குடுதீவின் மேற்கு கரையோரப் பகுதியை நோக்கி விசைப்படகில் இருந்து நேற்று முன்தினம் [வியாழன்] இரவு 10.45 மணியளவில் தொடர்ச்சியாகப் பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இடையிடையே நயினாதீவு, காரைநகர் கடற்படை முகாம்களில் இருந்து ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டது.

ஷெல்கள் இறுப்பிட்டி, குறிகாட்டுவான் பகுதியின் கரையோரங்களில் விழுந்து வெடித்தன. [ஒ-131-15]

## ஆனையிறவில் நேற்று அவ்ரோ பொதிகளைப் போட்டது!

யாழ்ப்பாணம், அக். 12

ஆனையிறவு முகாம் பகுதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் வட்டமிட்ட அவ்ரோ விமானம் ஒன்று அங்கு 17 பொதிகளைப் போட்டது.

அனேக பொதிகள் முகாமுக்கு அருகிலேயே விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ 3]

## நயினாதீவு படகுச் சேவை ஆரம்பமானது

புங்குடுதீவு, அக். 12

குறிகாட்டுவான் - நயினாதீவு படகுச் சேவை கடந்த வியாழக்கிழமை [9 ஆம் திகதி] தொடக்கம் மீண்டும் நடைபெறுகிறது.

அன்றைய தினம் பிரயாணிகளை ஏற்றுவதற்கும், தனியார் வியாபாரிகள் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கும், புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நயினாதீவில் உள்ள தனது கிளைகளுக்கு பொருள்களை ஏற்றிச் செல்வதற்குமாக மூன்று படகுகள் சேவையில் ஈடுபட்டன.

நெடுந்தீவு, எழுவைதீவு, அனலைதீவு ஆகிய பகுதிகளுக்கான படகுச் சேவைகளும் விரைவில் ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. [அ-131]

## கப்பலில் வரும் 25 முச்சக்கர வண்டி

யாழ்ப்பாணம், அக். 12

யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க 25 முச்சக்கர வண்டிகள் கப்பலில் வருகின்றன.

''குமாரி'' கப்பலில் இவை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம், அக். 12

அமரர் த. ஆலாலசுந்தரம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியில் அரியாலை ஐக்கிய கழக அணியுடன் ஷப்றா அணி மோதுகிறது.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட இப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். தொடர்ந்து பரிசளிப்பு வைபவமும், நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெறும். [இ]

## ராஜா. கொல்லுரே புதிய எம். பி.

கொழும்பு, அக். 12

நாடாளுமன்றத்தில் வெற்றிடமாகவுள்ள — ஐக்கிய சோஷலிச முன்னணியின் எம்.பி. பதவிக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிச் செயலாளரும், ஐ. சோ. மு. செயலாளருமான டி. சி. ராஜா கொல்லுரே நியமிக்கப்பட்டுள்ளார். [உ-3]

## ருமேனிய தூதர் கடத்தல்; மேலும் சில குழுக்கள் உரிமை

புதுடில்லி அக். 12

புதுடில்லியில் வைத்து ருமேனிய நாட்டு பதில் தூதுவர் லிவியு ராடுவைக் கடத்தியது தொடர்பாக பல தீவிரவாதக் குழுக்கள் உரிமை கோரியுள்ளன.

இதனால் இந்த விவகாரத்தில் பெரும் குழப்பம் நிலவுகிறது.

அது தொடர்பான மர்மமும் நீடித்து வருகிறது.

தற்சமயம் நான்கு தீவிரவாதக் குழுக்கள் உரிமை கோரியுள்ளன.

இதேவேளை —

காலிஸ்தான் விடுதலைப் புலிகள் இயக்கம், ருமேனிய தலைநகர் புக்காரெஸ்டில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமது உறுப்பினர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டால் மட்டுமே தூதுவர் விடுவிக்கப்படுவார் என்று நிபந்தனை விதித்துள்ளது.

மற்றைய அமைப்புகளும் வெவ்வேறு நிபந்தனைகளை விதித்துள்ளன. [ஒ-த]

## பிரதமருக்கு மற்றொரு பதவி

கொழும்பு, அக். 12

பிரதமரும், நிதியமைச்சருமான திரு டி. பி. விஜயதுங்க தொழில், தொழிற் பயிற்சி அமைச்சர் பதவியையும் நேற்றுப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

தொழில், தொழிற் பயிற்சி அமைச்சராக இருந்த ஜி. எம். பிரேமச்சந்திர தமது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு இப்போது அதிருப்திக் குழுவில் அங்கம் வகிப்பது தெரிந்ததே. [ஒ-த]

## 'குமாரி' கப்பலில் உணவு, உரம்

யாழ்ப்பாணம், அக். 12

இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் 'குமாரி' கப்பலில் உரமும், உணவுப் பொருள்களும் எடுத்து வரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

744 மெற்றிக் தொன் அமோனியம் சல்பேட் உரம் மற்றும் அரிசி, மா, சீனி, பால்மா வகைகள் ஆகியவை இந்தக் கப்பலில் வருகின்றன.

இலங்கை வங்கிக்குப் பணமும், யாழ். மாவட்டத்துக்குரிய 138 பெட்டி தபால்களும் இக்கப்பலில் கொண்டு வரப்படுகின்றன. [உ-3]

## நிலைமை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகரிடம் சமர்ப்பித்த சமயம் அதுகுறித்து அவர் திருப்தி தெரிவித்தார். ஜனாதிபதிக்கும் அதுபற்றி அறிவித்திருந்தார்.

இந்த மனுக்குறித்து ஜனாதிபதி அஞ்சினார். அதனால் தான் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தார். இப்போது சபாநாயகர் மனுவை நிராகரித்துவிட்டார். ஜனாதிபதி ஆட்சி முறை தேவையா என்பது பற்றி முடிவுசெய்ய சர்வஜன வாக்கெடுப்பு நடத்துமாறு ஏற்கனவே நாம் கோரிக்கை விடுத்திருந்தோம். அதனைத் தொடர்ந்தும் வலியுறுத்தப் போகிறோம் — என்றார். (உ-3)

## ஸ்ரீலங்காவிடம்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஜோர்ஜ், சிறிலங்காவின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகத்திடம் நேற்று வெளிவிவகார அமைச்சில் வைத்துக் கையளித்தார்.

இராமேஸ்வரத்திலிருந்து கடந்த 19 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற 24 மீனவர்களை, சிறிலங்கா கடற்படையினர் சுற்றி வளைத்துத் தாக்கிய பின்னர் கடலில் தூக்கி எறிந்தனர் என்றும் —

அதில் மூவர் கடலில் மூழ்கி உயிரிழக்க ஏனைய 21 பேரும் அருகிலிருந்த தீவு ஒன்றை நீந்திச் சென்றடைந்தனர் என்றும் —

அவர்களை யாழ்ப்பாணம் அழைத்துச் சென்ற விடுதலைப் புலிகள், அங்கு வைத்து செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுவிடம் அவர்களை ஒப்படைத்தனர் என்றும் இந்திய வானொலி அறிவித்தது. (உ-த)

## யாழ். பல்கலை. தராதர பத்திரங்கள்

யாழ் பல்கலைக்கழக இறுதிப் பரீட்சையில் சித்தி அடைந்து தராதரப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் இம்மாதம் 30 ஆம் திகதி புதன்கிழமை 12-00 மணிக்கு பல்கலைக்கழக மாணவ ஆணைக்குழு கேட்போர் கூடத்தில் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-த]

## முதலுதவி பயிற்சி

யாழ்ப்பாணம், அக். 12

யாழ். மாநகராட்சி மன்ற பிரதேசத்திற்குட்பட்ட சனசமூக நிலையங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட தொண்டர்களுக்கு, ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் முதலுதவிப் பயிற்சி வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற இருக்கும் இப்பயிற்சி நெறியில் பங்குபற்றவிருப்போர் யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசமூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். [ஒ]

## ஏற்பினால் பலி!

யாழ்ப்பாணம், அக். 12

ஒரு மாதத்திற்கு முன் தகரம் வெட்டி காயமடைந்த ஒருவர், ஏற்புத்தடை ஊசி போட்டு தகுந்த சிகிச்சை பெறாத காரணத்தால் நேற்று மரணமானார்.

கொக்குவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி அன்னலிங்கம் [வயது 50] என்னும் இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமானார். [ஒ-15]

## ராணுவ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கு சண்டை காரணமாக அடுத்த வருடத்துக்குரிய இராணுவச் செலவினத்தை அதிகரிக்க வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டிருப்பதாகவும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை —

அடுத்த வருட வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் உத்தேசத் தொகை 6 ஆயிரம் கோடி ரூபாவாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-த)

## ஜே.வி.பி..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவர்கள் வசம் இருந்தன. இவை போக்லாந்து யுத்தத்தின்போது பிரிட்டிஷ் படைகளால் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களாகும்.

அவர்களிடமிருந்த நவீனமானதும், ஆகப் பிந்திய ரகங்களைச் சேர்ந்ததுமான ஆயுதங்கள் இருந்தன.

ஸ்ரீலங்கா இராணுவத்துடனும், பொலிஸாருடனும் மோதி தமிழ் மக்கள் கொல்லப்படுவதாகக் காட்டி, இந்தியப் படையைத் திரும்பிச் செல்ல வேண்டாம் என்று கேட்பதற்கு வடக்கு-கிழக்கு மாகாணசபை திட்டமிட்டிருந்தது-என்றும் அவர் சொன்னார். (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# O/L DAY CLASS

அனைத்து பாடங்களும்

ஆரம்பம்: 09 — 10 — 1991

BOND கல்வி நிறுவனம்

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

[4331]


# லலித் குழுவின் வழக்கு மாத முடிவில் விசாரணை

கொழும்பு, அக். 12

ஐ.தே. கட்சியிலிருந்து தங்களை வெளியேற்றியதை ஆட்சேபித்து லலித் அத்துலத் முதலி மற்றும் ஏழு எம்.பிக்களின் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை, இம் மாதம் 31 ஆம் திகதி முதல் ஒருவார காலம் தொடர்ந்து விசாரணை செய்வது என உயர் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை முடிவு செய்தது.

இந்த வழக்கின் பிரதிவாதிகளான ஐ.தே.க. தலைவர் டாக்டர் எம்.இ.எம். ஹலீல், செயலாளர் பி. சிறிசேனகூரே, பொருளாளர் கே. கணேசலிங்கம் ஆகியோருக்கு நோட்டீஸ் பிறப்பிக்கவும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான ஆர். என். எஸ். திரரட்ன, பி இராமநாதன், பிரியந்த பெரேரா ஆகியோர் முன்னிலையிலேயே மனு பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது.

பிரதிவாதிகள் பதில் மனுவை தாக்கல் செய்ய இம் மாதம் 23 ஆம் திகதி வரை உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

வழக்கின் நடைமுறைகள் தொடர்பாக ஆராய எதிர்வரும் 24 ஆம் திகதி வழக்கை எடுக்கவும் நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து இரு மாத காலத்துக்குள் தீர்ப்பு வழங்கப்படும் என்று நீதிமன்றம் அறிவித்தது. (உ-3)

# செப்டம்பர் மாத "வவுச்சர்கள்" அனுப்பப்படும்

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான செப்டம்பர் மாதத்துக்குரிய "வவுச்சர்கள்" நாளை மறுதினம் முதல் அவர்களுக்கு அனுப்பப்படும் என்று யாழ். அரச அதிபர் நேற்றுத் தெரிவித்தார்.

செப்டம்பர் மாதத்துக்குரிய கட்டு நிதி அனுப்பப்பட்டுள்ளதாகவே கொழும்பில் இருந்து நேற்று முன்தினம் தகவல் கிடைத்தது.

ஆகஸ்ட் மாதத்துக்குரிய கட்டுநிதி என்று நேற்றைய உதயனில் தவறுதலாக குறிப்பிடப்பட்டுவிட்டது. ஆகஸ்ட் மாதத்துக்குரிய ஓய்வூதியம் வழங்கப்பட்டுவிட்டது குறிப்பிடத்தக்கது. [அ-3]


# தமிழீழ காவல் துறை
## பதவி வெற்றிடங்கள்

1. நிர்வாக அலுவலர்

கல்வித் தகைமை : ஆகக் குறைந்த கல்வித்தகைமை க. பொ. த. [உயர்தரம்]

வயதெல்லை : 25 — 45

2. எழுதுவினைஞர்

கல்வித் தகைமை : க. பொ. த. [சாதாரணம்] சித்தி அடைந்திருத்தல் வேண்டும். தமிழ், கணிதம் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

வயதெல்லை : 18 — 35

3. தமிழ் தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர்

கல்வித் தகைமை : க. பொ. த. சாதாரண தரத்தில் ஆறு பாடங்கள். தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

வயதெல்லை : 18 — 35

விண்ணப்பதாரிகள் 14 10-91, 15-10 91 ஆகிய தினங்களில் நேரில் சமுகம் தரவும்.

நேரம் : காலை 9 மணிமுதல் 12 மணிவரை

இடம் : தமிழீழ காவல்துறை தலைமைச் செயலகம்.

பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை

[சி/649]



யா/அச்சுவேலி மகாவித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம்.

# பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் இம்மாதம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— அதிபர்.

10-10-1991. (18386)



சென். ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்.

# பழைய மாணவர் சங்கம்
## வருடாந்த ஒன்றுகூடல்

மேற்படி ஒன்றுகூடல் 26 – 10 – 1991 சனிக்கிழமை கல்லூரியில் நடைபெறும். இவ் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர்களை அழைக்கின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

மு. ப. 7.00 - நற்கருணை ஆராதனை
" 8.15 - காலைப் போசனம்
" 9.00 - வருடாந்தப் பொதுக் கூட்டம்
" 10.00 - கிரிக்கெட் ஆட்டம்
பி. ப. 1.00 - மதிய போசனம்
" 2.30 - கரபந்தாட்டம்
" 3:30 - உதைபந்தாட்டம்
" 4.30. - தேநீர்

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள், அவற்றினை 19 – 10 – 1991க்கு முன்னதாக எழுத்து மூலம் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.

போசனங்களில் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள், 23 – 10 – 1991 க்கு முன்னதாக ரூபா 65/- ஐ பொருளாளர் திரு. த. யே. ஞானப்பொன்ராசா அவர்களிடம் செலுத்துமாறு வேண்டுகின்றோம்.

கே. என். வை. மொறிஸ்,
செயலாளர்.

சென். ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்,
12 – 10 – 1991. (18391)



# விளையாட்டுப் போட்டி

ஆனைக்கோட்டை மஹாஜன சனசமூக நிலைய எல்லைக்குள் வீரமரணமடைந்த வீரவேங்கைகளின் நினைவாக நடத்தப்படும் போட்டிகள்

19-10-1991 சனிக்கிழமை.

(1) 40 மைல் சைக்கிள் ஓட்டம்
(தமிழீழ எல்லை — Open Race)
ஆரம்பம்: காலை 6-00 மணி
சேர்வு கட்டணம்: ரூபா 50/-

(2) 20-10-1991 ஞாயிற்றுக்கிழமை
10 மைல் சைக்கிள் ஓட்டம் [பெண்கள்]
[தமிழீழ எல்லை — Open Race)
ஆரம்பம்: காலை 6-00 மணி
சேர்வு கட்டணம்: ரூபா 50/-

(3) மற்றும் பலதரப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் மஹாஜன சனசமூக நிலைய எல்லைக்குட்பட்ட வீரர்களுக்கு மட்டும் நடைபெறும்.

பங்குபற்றும் போட்டியாளர்கள் மேற்படி நிலையத்தில் 19-10-91க்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.

– நிர்வாகிகள்.

[18390]



# A/L - 93

| | | |
|---|---|---|
| Chemistry | – | திரு. மகாதேவா |
| Chemistry | – | திரு. D. S. சோதி |
| Physics | – | திரு. அருள்தாஸ் |
| Physics | – | திரு ரவீந்திரநாதன் |
| Zoology | – | திரு. K. சிவபாதம் |
| Zoology | – | திரு விக்கி |
| Botany | – | திரு. ஸ்ரீகரன் |
| Botany | – | திரு. சதீஷ் |
| Pure & Applied | – | திரு. மகேஸ்வரன் |
| Pure & Applied | – | திரு. லக்ஷ்மன் |

ஆரம்பம்: 19-10-1991

✱ திரு. மகாதேவா ஆசிரியரின் வகுப்புகளுக்கான அனுமதிகள், 22 - 10 - 1991 (செவ்வாய்) பிற்பகல் 1-00 மணிக்கு நடைபெறும் இரசாயனவியல் பிரவேசப்பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் (40M. C. Q) முதல் 100 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

BOND கல்வி நிறுவனம்

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[4340]


# மரண அறிவித்தல்கள்

## திருமதி விசயம் கனகரட்ணம்

நவாலி வடக்கை (மயிலணி) வதிப்பிடமாகக் கொண்ட திருமதி விசயம் கனகரட்ணம் (24-09-91) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலம் சென்ற T. S. கனகரட்ணம் (சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசு சுன்னாகம்) அன்பு மனைவியும், சிறீதரனின் (ஹற்றன் நஷனல் வங்கி நகரக்கிளை கொழும்பு) அன்புத் தாயாரும், சாந்தினியின் (தேசிய அபிவிருத்தி வங்கி கொழும்பு) அன்பு மாமியும், பிரதீபன், கார்த்திகாவின் அன்புபேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (26 09-91) அன்று கொழும்பில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

18/3, சமிமண்ட் றோட், கொழும்பு. — 6

தகவல்: சிறீதரா (மகன்)

(C/10715)

## திருமதி மகேஸ்வரி சோமசுந்தரம்

நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மகேஸ்வரி சோமசுந்தரம் காலமானார்.

இவர் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த காலம்சென்ற Dr. தம்பு சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட மாணிக்கவாசகர் நமசிவாயத்தின் அன்புச் சகோதரியும், கதிர்காமநாதன் [Velona மொறட்டுவ], சரவணபவநாதன் [கனடா], காலம்சென்ற பத்மநாதன், கௌரி, சண்முகநாதன், Dr. மனோகரி [கனடா] ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனேஸ்வரி [ஆசிரியை, மார்விப்பாய் மகளிர் கல்லூரி], ராசமலர் [கனடா], Dr. வாமதேவா [பேராதனை பல்கலைக்கழகம்] நிர்மலாதேவி, Dr விபுலானந்தன் [கனடா] ஆகியோரின் அன்பு மாமியாரும், சிந்து, தர்சனா, புருஷோத்தமன், அம்பிகை, தேவகி, யசோதரன், அமலினி, டிசியந்தி, வஜினா, வருணன், நிருபன், யோகேந்திரன் [U. C சாவகச்சேரி] ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை 13-10-91 காலை 10 மணியளவில் மட்டுவிலில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

தகவல்:
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. சோ. சண்முகநாதன் [இந்திரன்] [மகன்]

(18395)

# 7 ஆம் மாத நினைவலைகளில்
## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



மலர்வு: 30 12-1937

உதிர்வு: 21-03-1991

### திருமதி மங்கையர்க்கரசி சண்முகநாதன்

[12-10-91] இன்று காலை வேலணை சாட்டி பயானத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், நாளை 181 - கோவில் வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கும்

181, கோவில் வீதி, நல்லூர். (18123)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12 - 10 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org